# புதுமைப்பித்தன் சிறுகதைகளில் தொன்மம்

செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

*தமிழ்த்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.*

**Keywords:** இலக்கியம், விமர்சனம், பண்பாடு பற்றிய செய்திகள் சொல்லப்படுகின்றன.

## முகவுரை

தமிழ்ச் சிறுகதைப் படைப்பிலக்கியத்தில் வ.வே.சு.ஐயருக்குப் பிறகு மனதில் தோன்றும் இரண்டு பெயர்கள் புதுமைப்பித்தனும் கு.ப.ராஜகோபாலனும் ஆவர். சிறுகதை இலக்கணத்திற்கு இவ்விரண்டு மேதைகளையும் குறிப்பிடுவது மரபு. சிறுகதைத் துறையில் மட்டுமல்லாது திறனாய்வுத் துறையிலும் புதுமைப் பித்தன் முதலிடம் வகிக்கிறார்.

தமிழ்ச் சிறுகதையின் தந்தை என்று போற்றப் பெற்றவர் புதுமைப்பித்தன் புரட்சியும் புதுமையும் நிறைந்த சிறுகதைகளைப் படைத்துள்ளார். சிறுகதைகள் மூலம் தமிழ்மொழிக்கு வளமும் அழகும் சேர்த்தவர். உலக இலக்கியங்களை நன்கு கற்று, பயிற்சி பெறறவர். அவற்றை ஒட்டி தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை அவர்களுடைய மனநிலை சம்பந்தமான புதுமைக் கதைகள் எழுதுவதில் அவர் அக்கறை கொண்டிருந்தார்.

கதை கூறும் முறையில் பல்வேறு விதமான உத்திகளைக் கையாண்டு வெற்றி பெற்றுள்ள புதுமைப்பித்தன் பழைய கதைகளை தனது சிந்தனைக்கு ஏற்ப புதியதாகப் புனைந்திருக்கிறார். புதுமைப்பித்தன் புராணம், இதிகாசக் கதைகள் மட்டுமன்றி பழைய காலத்தில் இருந்து வருகின்ற நம்பிக்கையுடன் தொடர்பான பல கதைகளையும் சிறுகதைகளில் மறுவாசிப்பிற்கு உட்படுத்தியுள்ளார். புதுமைப்பித்தன் சிறுகதைகள் பற்றியதாக இவ்வாய்வு இடம்பெறுகின்றது.

ஒரு நாட்டினுடைய மக்களுடைய மொழி பண்பாட்டு வேர்கள் தொன்மங்களிலிருந்தே பெறப்படுகின்றன. மொழி, பண்பாடு என்பன காலத்துக்குக் காலம் வளர்ச்சி அடைகின்றன. தொன்மக் கதைகளும் காலத்துக்குக் காலம் மறுவாசிப்புப் பெற்று அமைகின்றன. தொன்மக்கதைகளின் ஊடாக மொழி வரலாறு, பண்பாட்டு வரலாறு, சமய வரலாறு பேசப்படுகின்றன. இவற்றினை கண்டறியவும் ஒப்பீட்டு ஆய்வினை மேற்கொள்ளவும் தொன்ம ஆய்வு உதவுகிறது. புதுமைப்பித்தன் பல தொன்மக் கதைகளைப் பயன்படுத்துகிறார்.

புதுமைப்பித்தன் கதைகளின் ஊடாக புதிய சிந்தனைகளை உணரலாம். உளவியல், அறிவியல், சமூகவியல் சார்ந்த புதிய சிந்தனைகளைப் பெறலாம்.

## ஆய்வு முறையியல்

விமர்சன ஆய்வு, ஒப்பீட்டாய்வு என்ற முறையியல் ஆய்வுகள் மூலம் இவ்வாய்வு முன்னெடுக்கப்படும். இவ்வாய்வின் அமைப்புப் பின்வருமாறு அமையும்.

*சிறுகதை என்பதன் கருத்தியல்:* சிறுகதை என்றால் என்ன என்பதற்குப் பலர் பலவாறு குறிப்பிடுவர் "ஒரு புள்ளிக்குள்ளேயே விசுவரூபம் தெரிய வேண்டும்" என்பர். இன்னும் குறிப்பிட்ட ஒரு சம்பவத்தில் மனிதமனம் படும்பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற ஒரு முறையை குறிப்பதுவே சிறுகதை எனவும் பேராசிரியர்.கா.சிவத்தம்பி குறிப்பிடுவார்.

*தொன்மம்:* தொன்மம் என்பதற்கு அரிஸ்ரோட்டில் தரும் கருத்து குறிப்பிடத்தக்கது. தொன்மம் என்பது இலக்கியங்களின் ஆன்மாவாகும். ஆங்கில அறிஞர் கம்பெல் கூறும்பொழுது தொன்மங்கள் உண்மைகளின் இருப்பிடம் கருத்துக்களின் வாழ்விடம், எண்ணங்களின் வரலாற்றுப் பெட்டகம் நினைவுகளின் சுழிமுனை என்று தொன்மத்தின் சிறப்பினைக் கூறுகின்றார். தொன்மம் என்பதன் விளக்கம் மேலும் விரிவாகக் கட்டுரையில் எடுத்துக் கூறப்படும்.

*பழைய இலக்கியங்களில் தொன்மம்:* விசுவாமித்திரர், இராமர், இலக்குமணன், துஸ்யந்தன், அகலிகை, கண்ணகி, சீதை, சகுந்தலை, பாஞ்சாலி, நளாயினி போன்றோர்களின் தொன்ம

கதைகள் பழைய இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. புதுமைப்பித்தன் எடுத்தாளுகின்ற தொன்மக் கதைகள் பழைய இலக்கியங்களில் பார்க்கப்பட்ட முறைமை எடுத்துக்காட்டப்படும்.

பாரதப் போரில் படைஞர்களுக்கு உணவு வழங்குதல், வேல் எறிந்து கடலைப் பின்னோடச் செய்தல், இமயத்தில் வில், மீன் சின்னம் பொறித்தல், விண்ணுலகத்திலிருந்து கரும்பைக் கொண்டுவருதல், மயிலுக்குப் போர்வையும், முல்லைக்குத் தேரும் ஔவைக்கு நெல்லிக் கனியும் அளிக்கும் செய்திகள் தொன்மங்களாக பழந்தமிழச் செய்யுட்களில் பேசப்பட்டன.

*புதுமைப்பித்தன் சிறுகதைகளில் தொன்மம்:*தொன்மக்கதையை கபாடபுரம் என்ற கதையின் ஊடாக மறுவாசிப்பு செய்கின்றார். கடல்கோளினால் கபாடபுரம் அழிவுற்றது. இதன் வாயிலாக கபாடபுரம் பழைய வரலாற்றையும் கடல்கோளினது கொடுமையையும் குறிப்பிடுகின்றார். இன்றைய எழுத்தாளர்கள் பலர் சுனாமி என்ற பெயரில் இதனை வெளிப்படுத்துவதைக் காணலாம். புதுமைப்பித்தன் மார்க்கண்டேயரின் கதைத்தொன்மத்தையும் சத்தியவான் கதையிலும் வரும் உயிருக்காக எமனிடம் போராடிய தொன்மங்களையும் கொண்டு காலனும் கிழவியும் என்ற கதையை மறு வாசிப்பு செய்துள்ளார். கச்சியப்பரின் கந்தபுராணத்தைப் போன்று புதுமைப்பித்தன் புதிய கந்தபுராணம் என்ற சிறுகதையைப் படைத்துள்ளார். இதுவும் மறுவாசிப்பிற்கு உட்பட்டுள்ளது.

கடவுள் பற்றிய சிந்தனை புதுமைப்பித்தனிடம் நிறைந்திருந்தது. அவரது கடவுள் பற்றிய சிந்தனைகள் அறிவியல் சார்ந்தன. கடவுள் என்ற சொல்லை (நம்பிக்கைத் தொன்மத்தைப்) பல கேள்விகளின் மூலம் தம் சிறுகதைகளில் மறுவாசிப்பிற்கு உட்படுத்தி உள்ளார். அன்று இரவு, சிற்பியின் நரகம் என்ற சிறுகதைகள் தொன்மக் கதைகளை அடிப்படையாகக் கொண்டன.

விக்கிரமாதித்தன் கதைப்பாணியில் கட்டிலை விட்டிறங்காக் கதையை புதுமைப்பித்தன் சித்திரிக்கிறார். பஞ்ச தந்திரக் கதையை அடிப்படையாகக் கொண்டு எப்போதும் முடிவிலே இன்பம் என்ற சிறுகதையை புதுமைப் பித்தன் சித்திரிக்கிறான். புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டு இலக்கிய மம்மநாயனார் புராணம் என்ற கதையை அமைத்தார்.

அகலிகைத் தொன்மத்தை எடுத்து சாபவிமோசனம், அகலிகை என்ற சிறுகதைகளைப் புதியபாணியில் மறு வாசிப்பு செய்துள்ளார். இரு வேறு கோணங்களில் ஆய்வு செய்துள்ளார். புதுமைப்பித்தன் தனது சிறுகதையில் கௌதமரையும் அகலிகையையும் வர்ணித்து அன்பில் உயர்ந்தவர்களாகக் காட்டுகிறார். பிறர் படைப்பது போன்று கௌதமரை கோபம் கொண்டு சாபம் இடுபவராகப் படைக்கவில்லை. அதற்கு மாறாக சாந்தமே உருவானவராகக் காட்டுகிறார். வஞ்சனை இல்லாத தூய்மையான கற்பு எனப் புது விளக்கம் கொடுப்பது புதுமையானது. அகல்யை கதை இந்திய மொழிகள் பலவற்றிலும் புதிய கோணங்களில் பார்க்கப்பட்டுள்ளது. புதுமைப்பித்தன் முற்றிலும் புதுமையாகப் படைத்துள்ளார். என நிறுவி காட்டப்படும் மகாகவி போன்றோரில் இருந்து புதுமைப்பித்தன் வேறுபடும் இடம் எடுத்து விளக்கப்படும

*பிற்கால இலக்கியங்களில் தொன்மம்:* பிற்காலச் சிறுகதைகளில் இத் தொன்மங்கள் பயன்படுகின்ற முறமை எடுத்துக்காட்டப்படும்.

பிற்கால இலக்கியங்களில் புதுமைப்பித்தன் எடுத்தாளுக்கின்ற தொன்மங்கள் எடுத்தாளப்படுகின்றனவா? என்பதுவும் அவ்வாறு எடுத்தாளப்பட்டால் அவற்றின் வேறுபாடும் எடுத்துக் காட்டப்படும்.

**சுருக்கமும் முடிவும்**

தொன்மக் கதையை பல்வேறு கோணங்களில் மறு வாசிப்பு செய்யலாம். என்பது புதுமைப்பித்தனின் கொள்கையாகும். தனக்கு உரிய உத்திகளைக் கையாண்டு நாடகபாணியை அமைத்து முடிவை வாசகர்களிடம் விடுவது புதுமைப்பித்தனின் கொள்கையாகும். தனக்கு உரிய உத்திகளைக் கையாண்டு நாடகபாணியை அமைத்து முடிவை வாசகர்களிடம் விடுவது புதுமைப்பித்தனின் புதுமையாகும்.

படைப்பாளிகளும் நுகர்வோரும் புதிய புதிய சிந்தனைகளை எழுப்பமுடியும் என்பதை புதுமைப்பித்தன் காட்டுகிறார்.

புதுமைப்பித்தன் தொன்ம வாசிப்பால் பெறப்படும் முடிவுகள் எடுத்துக்காட்டப்படும். தொன்மக் கதைகள் காலந்தோறும் புதுப் புதுக் கண்ணோட்டத்தில் சமுதாயத்தின் தேவைக்கேற்ப மறுவாசிப்புக்கு உட்படுகின்றன.

தொன்மம் பற்றிய ஆய்வு உலகலாவிய ரீதியில் திறனாய்வின் ஒரு பகுதியாக இன்று நோக்கப்படுகிறது. இன்றைய கால கட்டத்தில் பழைய பண்பாடுகளை பழைய வேர்களை தேட வேண்டிய நிலையில் ஆய்வுலகம் இருக்கின்றது. பழைய கதைகள் நம்பிக்கைகள் மூலம் செய்திகளை சொல்லுகின்ற மரபு தமிழ் இலக்கியத்தில் இருந்து வந்திருக்கிறது. பழைய கதைகள் வாயிலாக சமய கோட்பாடுகளை வாழ்வியல் நெறிகளை சொல்ல முடியும். இவ்வுத்தியை இலக்கியப் படைப்பாளிகள் தமது படைப்பினுடைய வெற்றிக்கு ஒரு கருவியாக தொன்மத்தை எடுத்தாளுவதைக் காணலாம். புதுமைப்பித்தன் இதில் வெற்றி பெற்றுள்ளார் என்றே கூற முடியும்.

சிறுகதைக்குக் கலை வடிவம் கொடுத்தோர் பலர். அமெரிக்காவில் நத்தானியல் ஆவ்தோன், பிரான்சில் மெரிம்மீ போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழ்ச் சிறுகதையின் தந்தையாகப் புதுமைப்பித்தன் விளங்குகின்றார்.

எந்த ஒரு சொல்லுக்கும் செயலுக்கும் பின்னால் அதற்கான வர்க்கம் ஒளிந்து கொண்டிருக்கிறது என மாமேதை மார்க் குறிப்பிடுவார். பின்னால் ஒளிந்து இருக்கும் வர்க்க நோக்கினை முன்னால் நிறுத்தி இனம்காட்டுவார் புதுமைப்பித்தன். வாழ்க்கயின் அன்றட வாழ்வின் அடிக்குரல் எதிரொலி அவரது சிறுகதைகளில் புலப்படுகின்றது.

அவரது கதைகள் சமூகத்தை நோக்கிப் பல்வேறு ஆணித்தரமான வினாக்களைத் தொடுகின்றன. போலி நியமங்கள் எப்படி மனிதனை வாட்டி வதைக்கின்றன என்பதனை எவரும் மறுக்க முடியாத வகையில் சித்திரிக்கின்றார். சமூக நோக்கோடு தொன்மைத்தை இணைக்கும் விதம் புதுமையானது. இறை சிந்தனையும், சமூக நோக்கும் இணைந்து செல்கின்றதைக் கதைகள் காட்டுகின்றன.

இறை சிந்தனையில் உயர்ந்த நம்பிக்கையும் தெளிவும் கொண்டவர் புதுமைப்பித்தன். அதனால்தான் அவரால் சிறந்த படைப்புக்களைப் படைத்தளிக்க முடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

புதுமைப்பித்தன் கதைகள், (சிறுகதைத் தொகுப்பு) பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2002.

மாதையன்.பெ., வரலாற்று நோக்கில் சங்க இலக்கியப் பழமரபுக் கதைகளும் தொன்மங்களும், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், 2001.

சிவத்தம்பி.கா., தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், பாரிநிலையம், சென்னை, 1967.